# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2211/51 - 2021 ජනවාරි මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.01.21

*2211/51 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. ஓ. 4/81*(XIII)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

*23ய (1) (அ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23ய(1) (அ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகிய நான், 2021 மாச்சு 31 ஆந் திகதியில் இருந்து பயனுறும் வகையில்–*

(அ) ஏதேனும் செய்முறை, வியாபாரம் அல்லது கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் விவசாய இரசாயனப் பொருட்களைப் பொதியிடுவதற்கான பொலிஎதிலீன் டெரெப்தாலேட் (PET) அல்லது பொலிவைனைல் குளோரைட்டு (PVC) பொருட்கள் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் செய்முறை, வியாபாரம் அல்லது கைத்தொழிலுக்காக இதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிளாஸ்டிக் பொருள் :-

(i) *20. மி. லீ. தேறிய கொள்ளளவிற்கு/ 20 கிராம் தேறிய நிறைக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான சிறு பைகள் (உணவு மற்றும் மருந்துகளைப் பொதியிடுவது தவிர) ;*

(ii) *காற்றடைக்கப்படக்கூடிய விளையாட்டுப் பொருட்கள் (பலூன்கள், பந்துகள், நீரில் மிதக்கக்கூடிய/ நீரில் விளையாடக்கூடிய விளையாட்டுப் பொருட்கள், மற்றும் நீர் விளையாட்டுத் துணைப்பொறிகள் தவிர) ;*

(iii) பிளாஸ்டிக் காம்புடனான கொட்டன் பட் (Cotton bud) (மருத்துவ/ நோய் அறிகுறி சார்ந்த சிகிச்சைக்குப் பயன்படும் பிளாஸ்டிக் கொட்டன் பட் தவிர).

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக-

“விவசாய இரசாயனப் பொருட்கள்” என்பது, பீடைகொல்லி, வளர்ச்சி சீராக்கிகள், திரவப் பசளைகள் உட்பட விவசாயத்தில் பயன்படுத்தப்படும் சகல இரசாயனப் பொருட்களும் எனப் பொருள்படும் ;

“பிளாஸ்டிக் பொருள்” என்பது, பொலிஎதிலீன் டெரெப்தலேட், உயர் அடர்த்திகொண்ட பொலிஎதிலீன், குறைவான அடர்த்தி கொண்ட பொலிஎதிலீன், பொலிவைனைல் குளோரைட்டு, பொலிப்ரொப்பிலீன் பொலிஸ்டிரீன், உயிரியற் சிதைவுறும் பிளாஸ்டிக் அல்லது வேறேதேனும் ஒத்த மூலப்பொருள் அல்லது அதன் ஏதேனும் கலவையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள்” எனப் பொருள்படும் ;

“செய்முறை” என்பது, உற்பத்தி செய்தலை உள்ளடக்கும் ; அத்துடன்

“வியாபாரம்” என்பது, விற்பனை மற்றும் விற்பனைக்கான கொடைமுனைவை உள்ளடக்கும்.

**மஹிந்த அமரவீர,**
சுற்றாடல் அமைச்சர்.

கொழும்பு,
*2021, சனவரி 19.*

*02-16*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.